சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.07.07.2025.
OS.No.92/2024
PW 2 : கலியமூர்த்தி (வயது 73 ) த/பெ. தேவநாசன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1,2 பிரதிவாதிகள் தரப்பு கு.வி**

எனக்கு மாதவபெருமாள் கோவில் ( நொச்சியம்) சொந்த ஊர். வாதி சிறுபத்துார் கிராமத்தை சேர்ந்தவர். எனது ஊருக்கும் வாதியின் கிராமத்திற்கும் இடையே சுமார் 10 கி.மி தொலைவு இருக்கும். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதிதான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார். வாதியின் தகப்பனார் சிதம்பரம் பிள்ளை தாவா சொத்தை சமயபுரம், கண்ணனுார் ஸ்ரீ மாரியம்மன் ரத உற்சவ அன்னதான தண்ணீர் பந்தல் தர்மத்திற்காக தானமாக கொடுத்துள்ளார் என்றால் தானமாக கொடுக்கவில்லை, சொத்திலிருந்து வரும் வருமானத்தை மேற்சொன்ன காரியத்திற்கு பயன்படுத்துமாறு சொல்லியுள்ளார். வாதியின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் வாதியை சேர்த்து 6 நபர்கள். வாதியின் உடன் பிறந்தவர்கள் தாவா சொத்து உள்ள ஊரில் இல்லை 40 வருடங்களுக்கு முன்பே இலங்கைக்கு சென்று அங்கேயே தங்கிவிட்டார்கள். வாதியின் உடன் பிறந்தவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாதி குடும்ப மேலாளர் என்பதை காட்டுவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. அதே போல் வாதியின் மற்ற சகோதரர்கள் வாதியை குடும்ப மேலாளராக ஏற்றுக்கொண்டு ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்தை இது வரை வாதிதான் அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்து சமயபுரம், கண்ணனுார் ஸ்ரீ மாரியம்மன் ரத உற்சவ அன்னதான தண்ணீர் பந்தல் என்ற பெயரில் பட்டா பதிவு உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி தாவா சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்து தான் மேற்படி தர்ம காரியத்தை செய்து வருகிறார் என்றால் சரிதான். வருவாய் துறையினரோ, அறநிலையத்துறை சார்ந்தவர்களோ வாதிக்கு தாவா சொத்தை தர்ம

காரியத்திற்கு பயன்படுத்துவதில் எந்த இடையூறும் செய்ததில்லை என்றால் சரிதான். தாவா சொத்திலிருந்து வரக்கூடிய வருமானம் பற்றிய விவரக்ஙள் எதுவும் எனக்கு தெரியாது. வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது நிலத்திற்கு பக்கத்தில் தாவா சொத்து இருப்பதால் வாதி தாவா சொத்திற்கு வரும்போது அவருடன் பேசி பழக்கம். தாவா சொத்து மண்ணச்சநல்லூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் இருப்பதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாதியின் தகப்பனார் தர்மகாரியத்திற்காக எழுதி வைத்துள்ளார் என்றும், அவ்வாறு தர்மகாரிய்த்திற்காக தாவா சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தை செலவு செய்வதற்கு மட்டுமே வாதிக்கு உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தை வாதி வேறு நபர்களுக்கு விற்கிரயம் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டியவர் மற்றும் நெருக்கமானவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

*/ signed/*
கலியமூர்த்தி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி